**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் வாரியம் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதி ஒப்பளிப்பு – முதல் தவணை ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை**

**அரசாணை (நிலை) எண்.49** **நாள் 20.10.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**பிலவ – ஐப்பசி 3**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.41, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.05.2020.
2. அரசாணை (நிலை) எண்.58, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 31.07.2020.
3. அரசாணை (டி) எண்.3, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.01.2021.
4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.டி2/1195/2019, நாள் 22.06.2021.

* * * * *

**ஆணை:**

தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம், 2018–ன் கீழ் தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் வாரியம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

2. மேலே, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2020–2021 ஆம் ஆண்டிற்கான இவ்வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்கான தொடர் செலவினத்திற்காக ரூ.1 கோடி என நிர்ணயம் செய்தும் இத்தொகையினை இரண்டு தவணைகளாக (முதல் தவணை ரூ.50 இலட்சம் + இரண்டாவது தவணை ரூ.50 இலட்சம்) ஒப்பளிக்கலாம் என ஆணையிடப்பட்டது மற்றும் மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் முதல் தவணை தொகை ரூ.50 இலட்சம் மற்றும் இரண்டாவது தவணை தொகை ரூ.50 இலட்சம் முறையே நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வாரியத்தின் செலவினங்களை மேற்கொள்ள, ஒவ்வோர் ஆண்டும் அரசால், ரூ.1 கோடிக்கு மேல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருவதாகவும், வாரியத்தின் செலவினங்களுக்காக 2021–2022 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.25,00,000/– இவ்வாரியத்திற்கு பெற்று வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாரியத்தின் தலைமை நிருவாக அலுவலர், இத்தொகை போதுமானதாக இல்லை என்று தெரிவித்து ஊழியர்களின் சம்பளம், படிகள், அலுவலக வாடகை, வாகன எரிபொருள், அலுவலக பராமரிப்பு செலவு போன்ற பிற தொடர் செலவினங்களுக்காக கூடுதலாக ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்யுமாறு கோரியுள்ளதாக தெரிவித்து, 2021–2022 ஆம் நிதியாண்டில், வாரியத்தின் செலவினங்களுக்காக கூடுதலாக ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்கான தொடர் செலவினங்களுக்காக 2021–2022 ஆம் ஆண்டிற்கு, வரவு செலவு திட்டத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.25 இலட்சம் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.75 இலட்சம் என மொத்தம் ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) என நிர்ணயம் செய்து, இத்தொகையினை இரண்டு தவணைகளாக (முதல் தவணை ரூ.50 இலட்சம் + இரண்டாம் தவணை ரூ.50 இலட்சம்) ஒப்பளிக்கலாம் என அரசு ஆணையிடுகிறது. அதன்படி, 2021–2022 ஆம் ஆண்டிற்கான முதல் தவணையாக ரூ.50 இலட்சத்தினை (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) விடுவித்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – JC வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம் – 309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை"

(IFHRMS த.தொ.கு. 2225-03-800-JC-30901)

6. இரண்டாவது தவணைக்கான கருத்துரு அனுப்பும்போது வெளியிடப்பட்ட முதல் தவணைக்கான பயனீட்டுச் சான்றினை இனவாரியாக சேர்த்து அனுப்புமாறு இந்நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் வாரியத்திற்கு வழங்கிட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (பி.மி.பி.(ம)சி.ந. / வ.செ.பொ.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.43927/நிதி (பி.மி.பி)/2021, நாள் 20.10.2021-ல்

பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.621 (அறுநூற்று இருபத்து ஒன்று)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
நல ஆணையர், சென்னை-5
தலைவர், தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர்
பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும்
நிலைக் கொடைகள் வாரியம், சென்னை- 8.
முதன்மை நிருவாக அலுவலர்,
தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர்
பொது அறநிலை பொறுப்பாட்சிகள் மற்றும்
நிலைக் கொடைகள் வாரியம், சென்னை- 8.
மாநிலக் கணக்காயர், சென்னை-18 / (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-I),
சென்னை-18 / (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (தணிக்கை-II),
சென்னை-18 / (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு),
சென்னை - 8.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (பி,மிபி/வ.செ.பொ I/II/வ.வ.I) துறை,
சென்னை-9.
இருப்புக் கோப்பு /உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

20/10/21

**பிரிவு அலுவலர்**

20.10.21